**cross**

**O.S. No. 104/2015**

**Date: 14.08.2025**

**வா,சா. 10. இசக்கிராஜ்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. நான் என்ன படித்துள்ளேன் என்றால் பொறியியல் படித்துள்ளேன். எனது தந்தை பெயர் ஆரோக்கியம். ஆவணங்களிலும் எனது தந்தை பெயர் ஆரோக்கியம் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. கோபால் நாடாருக்கும் பஞ்சவர்ணத்திற்கும இடையே நடைபெற்ற திருமணம் நீதிமன்றத்தின் மூலம் ரத்து செய்யபடவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்கு நடவடிக்கைக்கு பின்னரும் மேற்படி சங்கதிகளை பற்றி கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. கோபால் நாடாருக்கும் பஞ்சவர்ணத்திற்கும இடையே நடைபெற்ற திருமணம் நீதிமன்றத்தின் மூலம் முறையாக ரத்து செய்யப்பட்டால்தான் அது முறையான விவாகரத்து என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது சகோதரர் பிரபாரகரன் தந்தை ஆரோக்கியம் என்றால் சரிதான். பிரபாரகரனுக்கு வேறு நபரை தந்தை என்று காட்டியிருந்தால் அது தவறு என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரபாரகரன் என்பவர் கோபால் என்பவருக்கு பிறக்கவில்லை. நானும் எனது அம்மாவும் கோபால் நாடாரின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் போலியான ஆவணங்களை தயார் செய்து வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வா.சா. ஆ, 23 முதல் 28 வரை தாக்கல் செய்யப்பட்டுள்ள திருமண அழைப்பிதழ்கள் முத்தம்மா குடும்ப நிகழ்விற்காக அச்சடிக்கப்பட்ட பத்திரிக்கை இல்லை என்றால் சரிதான். எங்களது ஊரில்

பொதுவாக குல தெய்வத்தை வைத்து நாடார் சமுதாயத்தில் சிவலிங்கம், வைத்திலிங்கம், பஞ்சவர்ணம், என்ற பெயர்கள் பரவலாக ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களுக்கு ஊரில் உள்ளது என்றால் சரிதான். வா.சா. ஆ, 23 முதல் 28 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்காக எங்களால் புதிததாக அச்சடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா. ஆ, 23 முதல் 28 வரை ஆவணங்கள் பிரதிவாதிகளின் உறவுமுறைகளால் அச்சடிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களில் உள்ள பெயர்கள் பிரதிவாதிகளின் குடும்ப உறவுகளை சார்ந்தது இல்லை என்றால் சரியல்ல, எனது அப்பா ஆரோக்கியம் நாளதுதேதிவரை உயிருடன் உள்ளார் என்றால் சரியல்ல. எனது தாயாரான வாதிக்கும் ஆரோக்கியம் என்பவருக்கும் இடையிலான திருமண உறவு நாளது தேதிவரை இருந்து வருகிறது என்றால் சரியல்ல. கோபால் நாடார் என்பவருக்கு பஞ்சவர்ணம் என்பவர் மட்டும் தான் நாளது தேதிவரை மனைவி ஆவார் என்றால் சரியல்ல. எனது அப்பா ஆரோக்கியத்தின் குடும்பத்தினருடன் சுமுக உறவு கிடையாது என்றால் சரியல்ல. எனது அப்பா ஆரோக்கியத்தின் சொத்துக்கள் வாடியூர் கிராமத்தில் உள்ளது என்றால் சரியல்ல. எனது தந்தையை எனது அம்மா பிரிந்து வாழ்வதால் தான் என் தந்தைக்கு வாடியூரில் சொத்துக்கள் உள்ள விவரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. எனது அம்மாவிற்கும் கோபால் நாடாருக்கும் இடையில் எக்காலத்திலும் திருமணம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. முதல் நிலை சாட்சியத்தில் கூறப்பட்ட சங்கதிகள் அனைத்தும் தவறானது என்றால் சரியல்ல.

**cross**

**O.S. No. 104/2015**

**Date: 14.08.2025**

**வா,சா. 9. செல்வி**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. முத்தம்மாள் என்ன வழக்கு போட்டுள்ளார் என்றால் சொத்திற்காக போட்டுள்ளார். பிரதிவாதிகளுக்கும் எனக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரியல்ல. எனது வீட்டுக்காரருக்கும் பிரதிவாதிகளுக்கும் உறவுமுறை கிடையாது என்றால் சரியல்ல. முதல்விசாரணையில் சொல்லப்பட்ட விவரங்கள் எனது சகோதரி கூறி எனக்கு தெரியும் என்றால் சரிதான். முதல்விசாரணையில் சொல்லப்பட்ட சங்கதிகள் அனைத்தும் தவறானது என்றால் சரியல்ல. கோபால் நாடருக்கும் பஞ்சவர்ணத்திற்கும் இடையில் நாளது தேதிவரை திருமண உறவு உள்ளது என்றால் சரியல்ல, பஞ்சவர்ணம் வேறு ஒருவருடன் சென்று விட்டார். பஞ்சவர்ணம் வேறு ஒருவருடன் சென்று விட்டார் என்று பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முத்தம்மாளுக்கும் கோபால் நாடருக்கும் எந்த காலத்திலும் திருமணம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனது அக்காவிற்க ஆதரவாக நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**cross**

**O.S. No. 104/2015**

**Date: 14.08.2025**

**வா,சா. 8. பாப்பம்மாள்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. எனது பெயர் முகவரியை காட்டுவதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. என்னிடம் ஆதர் அடையாள அட்டை உள்ளது. எனக்கு எழுத படிக்க தெரியாது. என்னிடம் காட்டப்படும் நான் தாக்கல் செய்த நிருபண உறுதிக்கூற்றில் என்ன விவரம் உள்ளது என்று எனக்கு தெரியாது. எனது மகளுக்கு பெரியவர்களால் நிச்சயக்கப்பட்டு ஒருமுறை தான் சாதி சமய முறைப்படி திருமணம் செய்தோம் என்றால் சரிதான். 2 வது முறை திருமலாபுரத்தில் திருமணம் செய்து வைத்தோம். கோபால் நாடருக்கு ஏற்கனவே திருமணமாகி பஞ்சவர்ணம் என்ற மனைவி உள்ளார் என்றால் சரிதான். பஞ்சவர்ணத்திற்கும் கோபால் நாடாருக்கும் இடையே ஆன திருமண உறவு என்ன ஆனது என்று தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு சொந்த ஊர் சிந்தாமணி. எனது மகளை வாடியூரில் திருமணம் செய்து கொடுத்தேன். என் மகளுக்கு முதல் திருமணம் செய்து கொடுத்த வாடியூரில் உள்ளவர்களுக்கும் எங்களுக்கும் பேச்சு வார்த்தை கிடையாது. எனது மகளின் முதல் கணவர் ஆரோக்கியம். மேற்படி கல்யாணம் கிறிஸ்தவ முறைப்படி நடந்தது. ஆரோக்கியம் இன்றைய தேதி வரை உயிருடன் உள்ளாரா என்று கேட்டால் அவர் விபத்தில் இறந்து விட்டார். மேற்படி ஆரோக்கியம் விபத்தில் இறந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மகள் ஆரோக்கியத்துடன் சேர்ந்து வாழமால்

தனியாக வாழ்ந்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது மகளுக்கும் ஆரோக்கியத்திற்கும் உள்ள திருமணம் இன்று வரை அமலில் உள்ளது என்றால் சரியல்ல. கோபால் என்ற கோபாலகிருஷ் நாடாருக்கும் வாதிக்கும் எந்த காலத்திலும் திருமணம் நடைபெறவில்லை என்றாலும் மற்றும் திருமண உறவில் இல்லை என்றாலும் சரியல்ல. ஆரோக்கியத்திற்கு பிறந்த குழந்தைகளை கோபால் நாடார் தனது சொந்த பிள்ளைகளாக வளர்த்து வந்தார் என்று சொல்லப்பட்ட சங்கதிகள் தவறானது என்றால் சரியல்ல. வாதி எனது மகள் என்பதால் அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.